இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி



நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

திங்கள்கிழமை 03-11-2025

# பிரதமர் திரும்பப் பெற வேண்டும்!

வழக்கமாக இந்து, முஸ்லீம் என்று பேசி ரத்தங்களை ஓடவிட்டுக் குடிப்பதுதான் பா.ஜ.க.வின் பழக்கம் . இப்போது தமிழன், பீகாரி என்று கிளப்பி ரத்தம் குடிக்கத் திட்டமிடுகிறார்கள்.

மாண்புமிகு நரேந்திர மோடி இத்தனை ஆண்டுகாலம் பிரதமராக இருக்கிறோம் என்பதையே மறந்துவிட்டு, இன்னும் பழைய குஜராத் கலவரக் காலத்திலேயே இருக்கிறார் என்பதையே பீகார் மாநிலத்தில் அவர் ஆற்றிய உரை காட்டுகிறது. பீகாரில் நிதிஷ்குமாரை மிரட்டி பாதிக்கு பாதி இடங்களை பறித்துவிட்டது பா.ஜ.க.. நிதிஷ்குமாருக்கு என்ன செய்வது என்றும் தெரியவில்லை. என்ன நடக்கிறது என்பதும் தெரியவில்லை. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள தனது கட்சியைக் காவு கொடுத்துவிட்டார், நம்மூர் பழனிசாமியைப் போல!

**ஆனாலும் தோல்வி உறுதி என்பது தெரிந்துவிட்டது பிரதமர் மோடிக்கு. அதனால் பிளவுவாத, வன்முறை, அராஜக குஜராத் பாணியை அவித்து விட்டார் மோடி. கர்நாடகா, தெலங்கானாவைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவர்கள், பீகார் மக்களைத் தொடர்ந்து அவதூறு செய்வதாகவும், தமிழ்நாட்டிலும் பீகார் மக்கள் தொடர்ந்து துன்பத்துக்கு உள்ளாவதாகவும் பிரதமர் மோடி பேசி இருக்கிறார். இதுதான் அவர் வகிக்கும் பதவிக்கு அழகா?**

எந்த இடத்தில், எப்போது தாக்கப்பட்டார்கள் என்று சொல்ல முடியுமா மோடியால்? அப்படி எங்காவது நடந்த போது நீங்கள் கண்டித்து அறிக்கை வெளியிட்டதாக பதிவுகள் இருக்கிறதா? கரூர் சம்பவத்துக்கு ஓடி வந்ததே பா.ஜ.க. குழு, அப்படி எப்போதாவது பா.ஜ.க. குழு வந்துள்ளதா? பார்த்ததா? யாராவது சாட்சியம் அளித்துள்ளார்களா? இங்கே வாழ முடியவில்லை, அடிக்கிறார்கள் என்று எவராவது பீகாருக்கு திரும்பியதாகக் காட்ட முடியுமா? எதுவுமே துளியும் கிடையாது. பிறகு எப்படி இந்திய நாட்டின் பிரதமர் இப்படிப் பேசலாம்?

**இந்தியா முழுமைக்குமான ஒரு பிரதமர், ஒரு மாநில மக்களை இன்னொரு மாநிலத்தில் தாக்குகிறார்கள் என்று கூச்சமில்லாமல் பேசினால், அதனை வெளிநாட்டு அதிபர் என்னவாக புரிந்து கொள்வார்? 'இந்தியாவில் உள்நாட்டுக் குழப்பம்' என்றுதான் புரிந்து கொள்வார். மோடி ஆட்சியில் இந்தியா இப்படித்தான் இருக்கிறதா? அல்லது, இந்தியா இப்படித்தான் இருக்க வேண்டும் என்று விரும்புகிறாரா?**

தி.மு.க.தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களது அழைப்பை ஏற்று பீகார் மாநிலத்தின் தலைவர் தேஜஸ்வீ தமிழ்நாட்டுக்கு வந்து சில நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டார். அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத பா.ஜ.க.வின் சமூகவலைத்தளப் பிரிவு, ஒரு பொய்யைப் பரப்பியது. பொய்யைப் பரப்பியவரைக் கைது செய்தது தமிழ்நாடு காவல் துறை. பீகார் மாநிலத்தில் இருந்து முதலமைச்சர் நிதிஷ்குமாரால் அனுப்பி வைக்கப்பட்ட அதிகாரிகள் தமிழ்நாடு வந்து விசாரணை நடத்தினார்கள். அப்படி எந்த நிகழ்வும் இல்லை என்று அவர்கள் பேட்டி அளித்துச் சென்றார்கள். பிரதமர் மோடிக்கு சந்தேகம் இருக்குமானால் நிதிஷ்குமாரைக் கேட்கவும்.

**அல்லது இங்கே இருக்கிறாரே ஆளுநர் ரவியைக் கேட்கவும். 'தமிழ்நாட்டு மக்கள் நல்லவர்கள். வடமாநிலத் தொழிலாளர்கள் நல்லவர்கள். தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதில் மாநில அரசு உறுதியுடன் இருக்கிறது' என்று அப்போது அறிக்கை வெளியிட்டார் ஆளுநர் ரவி. இது வடமாநிலத்தவர்க்கும் தெரிய வேண்டும் என்பதற்காக இந்தியிலும் அறிக்கையாகக் கொடுத்தார் ஆளுநர்.**

அல்லது பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் வானதி சீனிவாசனைக் கேட்கவும். **''வடமாநிலத் தொழிலாளர்கள் தமிழ்நாட்டில் பாதுகாப்பாக இருக்கிறார்கள்'' என்று அறிக்கை வெளியிட்டார் வானதி.**

**அல்லது பா.ஜ.க.வைச் சேர்ந்த நாராயணன் திருப்பதியைக் கேட்கவும். "பீகார் மற்றும் 'வடமாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் மீது தமிழர்கள் தாக்குதல் நடத்துவதாக வரும் செய்திகள் அனைத்தும் தவறானது. மற்றும் உண்மைக்கு புறம்பானது. வெட்கக் கேடானது. தமிழர்கள் யாரையும் புண்படுத்தும் கலாச்சாரம் கொண்டவர்கள் அல்ல"** என்று அறிக்கை வெளியிட்டார் அவர்.

வெட்கக் கேடான செயலை பீகாரில் போய் எதற்காக, ஒரு பொறுப்பான பதவியில் இருப்பவர் செய்ய வேண்டும்? என்ன தேவை? பீகாரில் வாங்கப்போகும் சில தொகுதிகளுக்காக இந்தியாவின் ஒட்டுமொத்த அமைதியைக் காவு கொடுக்க நினைக்கிறீர்களா? வடமாநிலத்தில் இருக்கும் தமிழர்களை விரட்டும் திட்டமா இது? தமிழ்நாட்டில் நிம்மதியாக வாழும் வடமாநிலத்தவர் வாழ்க்கையைக் கெடுக்கும் திட்டமா இது?

**தமிழர்கள் மீதும், தமிழ்நாட்டின் மீதும் எதற்காக இத்தகைய வன்மம்? ஒடிசாவில் நவீன் பட்நாயக்குடன் ஒரு தமிழ் அதிகாரி இருந்தார். நவீன் பட்நாயக்கை அரசியல் ரீதியாக வீழ்த்த அந்த தமிழ் அதிகாரி மீது பாய்ந்தது பா.ஜ.க.. 'ஒடிசாவை ஒரு தமிழர் ஆள அனுமதிக்கலாமா?' என்று கேவலமாகக் கேட்டதையும் இந்த நாடு பார்த்தது. 'பூரி ஜெகந்தார் கோவில் சாவியைக் காணோம், அது திருடப்பட்டு தமிழ்நாட்டில் கொண்டு போய் வைக்கப்பட்டுள்ளது' என்று சொல்லி ஒடிசாவில் பரப்புரை செய்தது பா.ஜ.க.**

அதே கேவலத்தை பீகாரில் செய்கிறார்கள், 'தமிழ்நாட்டில் பீகாரிகளை துன்புறுத்துகிறார்கள்' என்று. சமூக வலைத்தளங்கள் இல்லாத காலத்தில் இதுபோன்ற பொய்களை ஊர் நம்பும். ஆனால் இன்று அடுத்த நொடியே உண்மைகள் வெளியில் வந்துவிடும். இது கூட பிரதமர் மோடிக்குத் தெரியவில்லை.

தமிழ்நாடு அரசியலை, அரசியலாகத்தான் எதிர்கொள்ளுமே தவிர, பா.ஜ.க.வைப் போல அப்பாவிகளைத் துன்புறுத்தி அல்ல. பா.ஜ.க.வின் தமிழின விரோத அரசியலைத் தமிழ்நாட்டு மக்கள் புரிந்து கொள்ள பிரதமர் மோடியின் பேச்சு உதவி இருக்கிறது.

**'தமிழர்களைச் சொல்லவில்லை, தி.மு.க.வினரைத்தான் சொன்னார் பிரதமர்' என்கிறார் 'மாஜி' அண்ணாமலை. தி.மு.க.வினர் தாக்கினார்கள் என்பதற்கு ஏதாவது ஆதாரம் வைத்திருக்கிறாரா அவர்? சாட்டையால் அடிப்பது, சாணி அள்ளுவது ஆகிய வேலைகளை மட்டும் அவர் பார்க்கட்டும் அதற்குத் தானே ஐ.பி.எஸ். பதவியை ராஜினாமா செய்துவிட்டு அவர் வந்திருக்கிறார்?**

**பிரதமர் தனது பீகார் பேச்சை திரும்பப் பெற வேண்டும். துணிச்சல் இருந்தால் அதைத் தமிழ்நாட்டு மேடையில் சொல்ல வேண்டும்.**

● ●



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2025, சென்னை, நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கில் நடைபெற்ற சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன் போட்டியை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, முனைவர் டி.ஆர்.பி. ராஜா, பெருநகர மேயர் ஆர்.பிரியா, நா. எழிலன் எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தமிழ்நாடு டென்னிஸ் சங்கத் தலைவர் விஜய் அமிர்தராஜ், இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி மற்றும் பலர் உடன் இருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2025) மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் 1 சார்பில் சென்னை நேப்பியர் பாலத்தில் இருந்து தொடங்கிய சென்னை ரன்ஸ் 2025ன் பல்வேறு பிரிவு ஓட்டங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் 1 நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## மழையால் சேதமடைந்த பகுதிகளில்

# சாலைப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

**சென்னை, நவ. 3-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2025) சென்னை காமராஜர் சாலை நேப்பியர் பாலத்தில் இருந்து தொடங்கிய சென்னை ரன்ஸ் 2025ன் பல்வேறு பிரிவு ஓட்டங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

இந்நிகழ்விற்குப் பின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

இந்த பந்தயத்தை மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் 1 நிர்வாகிகள் ஒவ்வொரு வருடமும் நடத்திக் கொண்டு வருகிறார்கள். வெவ்வேறு பிரிவுகளில் 3 கி.மீ, 5 கி.மீ, 10 கி.மீ, 21 கி.மீ, என பொதுமக்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கு தனியாக ஒரு பிரிவு என ஒவ்வொரு வருடமும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 12,000 பேர் இதில் முன்பதிவு செய்து, இன்றைக்கு கிட்டத்தட்ட 10,000 பேர் இந்த போட்டியில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ஆர்வத்தை



பார்க்கும்போது ரொம்ப மகிழ்ச்சியாக இருந்தது,

**கலந்து கொண்ட அனைவருக்கும் பாராட்டு!**

மாராத்தான் போட்டி அவர்களுடைய உடல் நலத்துக்கு, விளையாட்டிற்கு, உடல் தகுதிக்கு அவர்கள் கொடுக்கின்ற அந்த முக்கியத்துவத்தை பார்க்கும்போது ரொம்ப மகிழ்ச்சி. வருடா, வருடம் நடத்திக் கொண்டு வருகிறார்கள். இந்த வருடம் நான் கலந்து கொண்டு அந்த போட்டியை தொடங்கி வைக்கக்கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது. அதற்கு இந்த நேரத்தில் மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கின்றேன். கலந்து கொண்ட அனைத்து பொதுமக்கள், பெண்கள், மாணவர்கள் அனைவருக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் என்னுடைய பாராட்டுக்கள், வாழ்த்துக்கள்.

**அரசு சார்பில் பணிகள்!**

பருவமழை முன்னேற்பாடு பணிகளையெல்லாம் இப்போது ஆரம்பிக்கவில்லை கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பே முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அனைத்து அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், மேயர், துணை மேயர், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் வரவழைத்து தொடர்ந்து கூட்டம் நடத்தி வருகின்றோம். இந்த வருடம் மட்டும் கிடையாது. கடந்த 3, 4 ஆண்டுகளாகவே முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

இந்த வருடம் நிறைய முன்னேற்பாடுகள் செய்திருக்கின்றோம். 3 நாட்கள் நல்ல மழை பெய்தது, இப்போது விட்டுள்ளது. ரோடு பேட்ச் வேலைகள் எல்லாம் இப்போது மழை விட்டதால் கடந்த 3 நாட்களாக வேகமாக நடந்து கொண்டிருக்கிறது.

நீர்வளத்துறை பணிகள், நெடுஞ்சாலைத்துறை பணிகள், மாநகராட்சியின் பணிகள் எல்லாமே களத்தில் பார்க்கும்போது சிறப்பாக செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் மக்கள் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள். எங்கே சென்றாலும் ஒவ்வொரு பிரச்சனையையும் சுட்டிக் காட்டுகிறார்கள். அந்த பிரச்சனைகளையெல்லாம் உடனுக்குடன் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ செய்து கொடுக்கின்றோம். அடுத்து ஒரு வாரத்திற்கு மழை இல்லை என்று வானிலை மையம் சொல்லியிருக்கிறார்கள். அரசு சார்பாக அனைத்து பணிகளையும் சிறப்பாக செய்து கொண்டிருக்கின்றோம். பொதுமக்களும் அவர்களுடைய ஆலோசனைகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மெட்ராஸ் ரவுண்ட் டேபிள் 1 நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மதுரவாயல் தெற்குப் பகுதி பாக முகவர்களுக்கு பயிற்சிக் கூட்டம்!

## காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. - பி.டி.பாண்டிசெல்வம் பங்கேற்பு!

*சென்னை, நவ. 3 -*

*சென்னை தெற்கு மாவட்டம்,மதுரவாயல் சட்ட மன்றத்தொகுதி. மதுரவாயல் தெற்குப் பகுதியில் அடங்கிய எட்டு வட்டங்களில் உள்ள 193 வாக்குச்சாவடி முகவர்கள் ( BLA2 ) மற்றும் வாக்குச் சாவடி டிஜிட்டல் ஏஜென்ட் ( BDA )க்களுக்கு என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச்சாவடி பயிற்சி கூட்டம் போரூர், சக்தி நகரில் உள்ள ராஜ் மஹாலில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (02.11.2025) காலை 9.30 மணியளவில் பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் தொகுதி மேற்பார்வையாளர் பி.டி. பாண்டிசெல்வம் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.*

*ஆகவே, இக்கூட்டத்திற்கு மதுரவாயல் தெற்குப் பகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள். மாவட்ட பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள். பகுதி அமைப்பாளர்கள். பாக பொறுப்பாளர்கள். பாகமுகவர்கள் ( BLA2).மற்றும் பாக டிஜிட்டல் ஏஜென்ட் ( BDA ) க்கள் கலந்து கொண்டனர்.*

*இக்கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தலைமையில் 28.10.2025 அன்று நடைபெற்ற "என் வாக்குச் சாவடி வெற்றி வாக்குச் சாவடி" பயிற்சிக் கூட்டத்தில் வழங்கிய ஆலோசனைகள் குறித்தும்*

*2. SIR எனப்படும் சிறப்புத் தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தத்தை 04.11.2025 அன்று முதல் செயல்படுத்துவது குறித்தும்*

*3. தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா.*

*4.. கழக ஆக்கப் பணிகள் குறித்தும் ஆலோசனை வழங்கி காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ., பி.டி.பாண்டிசெல்வம் ஆகியோர் பேசினர்.*



தாய்லாந்த் மற்றும் மலேசியாவிலும் நடைபெற்ற உலக யோகா மற்றும் கராத்தே சாம்பியன்ஷிப் போட்டிகளில் முதல் பரிசு வென்ற அடையார் வித்யா ரத்னா மெட்ரிக் மேல்நிலை பள்ளி மாணவர்கள் ம.ஜெகத்ரட்சகன் கே.கவுசிக் ஆகியோர் மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா. மோ.அன்பரசனைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் ஆலந்தூர் கராத்தே மாஸ்டர் எம்.முருகன்,யோகா மாஸ்டர் எஸ். மகாராஜா, மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் முனைவர் சி.பிரதீப் ஆகியோர் உள்ளனர்.